செ.வெ.எண்- 52 நாள்: 28.03.2018

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

கரூர் மாவட்டத்தில் 14 கிராம ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் முலம் நிரப்பிட 11.04.2018 (புதன் கிழமை) வரை அலுவலக வேலை நாட்களில் (காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்களால் (கி.ஊ) வரவேற்கப்படுகின்றன.

கிராம ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இன சுழற்சிக்கு தகுதியானவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். காலிப்பணியிட விவரங்களும், இன சுழற்சி விவரங்களும் http://www.karur.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்விபரங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக விளம்பர பலகையிலும் ஒட்டப்பட்டுள்ளது.

கரூீர் ஊராட்சி ஒன்றியம் புஞ்சை கடம்பங்குறிச்சி ஊராட்சியில் பொது என்ற இன சுழற்சியிலும் மற்றும் தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், ஆண்டாங்கோவில் (மேற்கு) ஊராட்சியில் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) (பெண் - ஆதரவற்ற விதவை) என்ற இன சுழற்சியிலும் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் மொடக்கூர்(மேற்கு) ஊராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் என்ற இன சுழற்சியிலும் மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நஞ்சைக்காளக்குறிச்சி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர), நெடுங்கூர் ஊராட்சியில் பொது (பெண் - ஆதரவற்ற விதவை) மற்றும் இராஜபுரம் ஊராட்சியில் ஆதிதிராவிடர் என்ற இன சுழற்சியிலும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

குளித்தலை ஊராட்சி ஒன்றியம் சூரியனூரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பெண் - ஆதரவற்ற விதவை), திம்மம்பட்டி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) (பெண்- ஆதரவற்ற விதவை) என்ற என்ற இன சுழற்சியிலும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கிருஸ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் மத்தகிரி ஊராட்சியில் பொது என்ற இன சுழற்சியிலும், பாப்பக்காப்பட்டி பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) இன சுழற்சியிலும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தோகைமலை ஊராட்சி ஒன்றியம் ஆர்ச்சம்பட்டி ஊராட்சியில் பொது என்ற இன சுழற்சியிலும், மற்றும் கூடலூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் (பெண் - ஆதரவற்ற விதவை), மற்றும் கல்லடை ஊராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் என்ற இன சுழற்சியிலும் மற்றும் சேப்ளாப்பட்டி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் தவிர) என்ற இன சுழற்சியிலும் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்படவேண்டும்.

இன சுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு கிராம ஊராட்சிப் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் காலியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிக்க வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட ஊராட்சியில் இல்லாவிட்டால் அவ் ஊராட்சியின் எல்லையை ஒட்டிய ஊராட்சியிலிருந்து விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த நபர்கள் பரிசீலனை செய்யப்படுவர்.

அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்கும் தேதியன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்கவேண்டும். 01.07.2018 அன்று பொது பிரிவினருக்கு 30 வயதிற்கு மிகாமலும், மற்ற பிரிவினருக்கு 35 வயதிற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியத்தின் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 11.04.2018 (புதன் கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்.

ஊராட்சி செயலாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், கரூர் மாவட்ட இணையதள http://www.karur.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., தெரிவித்தார்.

<u>வெளியீடு:</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.